உ

சிவமயம்



யாழ்ப்பாணம் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்,

பொலிகண்டி கிழக்கு, திக்கத்தை

வசிப்பிடமாக கொண்டவருமான

# திரு.செல்லம் திரவியம் அவர்களின்

சிவபதமெய்தியமை குறித்த

# ஞாபக மலர்

01.05.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர்

# திரு. செல்லம் திரவியம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 16 |
| ~ | ~ |
| 01 | 04 |
| ~ | ~ |
| 1908 | 2004 |

## திதி வெண்பா

ஆயும் தாரண சித்திரை வெள்ளி பூரட்டாதி
தேயும் அபரமதி துவாதசியே - சீர் பரவு
திரவியம்தான் பாரதனில் வாழ்வு துறந்து
அரவசைத்தோன் திருவடிகள் சார்ந்திட்ட நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு செல்லம் திரவியம் ஓய்வு பெற்ற ஓவசியர்,
நீர்ப்பாசன இலாக்கா அவர்கள் சிவபதமெய்தியமையை
நினைவு கூரும்

# நினைவு மலர்

நவாலியூர் சைவ வேளாண்குல திலகராக விளங்கிய திரு.சின்னத்தம்பி செல்லமும் மட்டுவில் “சந்திரமௌலீஸ்வரர்” தேவஸ்தான ஆதீனகர்த்தா குழந்தைவேலரின் கனிஷ்ட புத்திரி ஆச்சிமுத்தம்மையும் (சன்னாசம்) இல்லறமாகிய நல்லறப் பயனாய் பயந்த கனிஷ்ட புத்திரனாம் செம்மல் திரவியத்தின் தேகவியோகம் குறித்த நினைவு மலர்.

அன்னார் மட்டுவிலில் கல்விகற்று பின்பு ஆங்கிலம் பயில்வதற்காக தமது ஒரே சகோதரியாகிய திக்கம் செல்லையபிள்ளையின் குடும்பத்துடனிருந்து, பருத்தித்துறை காட்லிக் கல்லூரியில் கல்வி பயின்று நீர்ப்பாசன இலாக்காவில் ஓவசியராகப் பணியாற்றினார். அச்சமயம் அக்கராயன் குளத்தில் பணியாற்றிய பொழுது நீர்ப்பாசன இலாக்காவினால் அமைக்கப்பெற்ற பிள்ளையார் கோவிலுக்குப் பூசை செய்யும் அரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார். அரசாங்கத்திலிருந்து ஓய்வுபெற்றபின் தனது சகோதரி திக்கம் செல்லையாபிள்ளையுடன் வசித்து வருங்கால் கந்தவனத்தைப் பணிந்து போற்றி கந்தபுராணத்திற்கு விரிவுரை ஆற்றும் பணியை மேற்கொண்டிருந்த அன்னார் அவனடியே சார்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஆயும் தாரண சித்திரை வெள்ளி பூரட்டாதி
தேயும் அபரமதி துவாதசியே - சீர்பரவும்
திரவியம்தான் பாரதனில் வாழ்வு துறந்து
அரவசைத்தோன் திருவடிகள் சார்ந்திட்ட நாள்.

## அக்கராயன் திருப்பதி விக்கின விநாயகர்

# திருவூஞ்சல்

அக்கராயன் திருப்பதி, முறிகண்டியிலிருந்து மேற்கே வன்னேரிக்குச் செல்லும் வழியில் ஆறுகல் தொலைவில் உள்ளது. அது பழைமை வாய்ந்த வரலாற்றுப் பெருமையுடைய இடம். அவ்விடத்திலுள்ள பழைய திருக்கோயில் அழிந்த பின்னர் இந்நாளிற் புதிதாகக் கட்டப்பட்ட இக்கோயில் புதுமையோடு விளங்குகின்றது. விநாயகப் பெருமான் பழமைபோல அடியார்க்கு அருள் செய்து வருகின்றார்.

விநாயகர் என்னுஞ் சொற்குத் தமக்கு மேலான நாயகன் இல்லாதவர் என்பது பொருள். தமக்கு மேலான நாயகன் இல்லாதவர் சிவபெருமான் ஒருவரேயாவர். அவரே முழுமுதற் கடவுள். அவர் தம்மை மெய்யன்புடன் வழிபடும் அடியாரை ஆட்கொள்ளும் பொருட்டுப் பல்வேறு வடிவங்களை எடுத்தருளினார். அவ்வடிவங்களுள் விநாயக வடிவமும் ஒன்று. கூத்தில் ஒருவரே இரண்டு மூன்று வடிவந் தாங்கி நடிப்பது போலக் கொள்க. விநாயகப் பெருமானை உபசார மாத்திரையாற் சிவனுக்கு மைந்தரென்று நூல்கள் கூறும். மெய்ப்பொருளுணர்வார்க்கு விநாயகப் பெருமானுஞ் சிவபெருமானும் ஒருவரே என்பது தெளிவாகும்.

இனி, ஊஞ்சல் என்பது தொண்ணூற்றாறு நூல் வகைகளுள் ஒன்றாகும். அது பழைய நாளில் ஊசல் என வழங்கப்பட்டது. ஊசலின் மரூஉ மொழியே ஊஞ்சல். ஊஞ்சல் பத்துப் பாடல்களையுடையது. ஆதலினால் அதனை ஊஞ்சற் பதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் வழங்கிவருகின்றனர். பதிகம் - பத்துப்பாடல்களைக் கொண்ட நூல்வகை.

ஊஞ்சலைக் கலிப்பாவினாலாயினும், ஆசிரிய விருத்தத்தினாலாயினும் பாடுவது மரபு. திருவாசகத்தில் வருவது ஆறடித் தரவு கொச்சகக் கலிப்பாவினால் ஆயது. சிலப்பதிகாரத்தில் வருவது ஐந்தடித் தரவு கொச்சகக் கலிப்பாவினால் ஆயது. அ∴து அதற்குரிய இசையுடன் படிக்கப்பட்டமையின் ஊசல்வரி எனப்பட்டது. (வரி-இசைப்பாட்டு). பிற்காலத்தார் ஆசிரிய விருத்தத்தையே பெரிதும் கைக்கொள்வாராயினர். இ∴து எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலாயது.

## காப்பு

1. திங்களொடு நதிகொன்றை முடியிற் சூடுஞ்
சிவனுமுமை யவளுமரு ளோடு நோக்க
மங்கலஞ்சே ரோங்கார வடிவு கூறாய்
மதகளிறு மொருபிடியு மாகிக் கூடத்
தூங்கமிகுந் தொந்தியிரு கோடு நால்வாய்
சுடர்விழிக ளொருமூன்று கொண்டு தோற்றிப்
புங்கவர்தம் மிடர்போக்கி வாழ்வு தந்த
புனிதனருட் சேவடிகள் போற்று வாமே.

2. ஒளியோங்கு மரகதப்பொற் றூண்கள் நாட்டி
உலவாத வைரமணி விட்டம் பூட்டி
நளியோங்கு முத்துமணி வடங்கள் கூட்டி
நவைதீர்ந்த செம்பவளப் பலகை மாட்டித்
தளியோங்குந் தொண்டர்தரு முஞ்சன் மீதே
தரணியெலா மீடேறித் தழைக்க வேறி
அளியோங்கு மலர்ச்சோலை யக்க ராயன்
அணிநகர்வாழ் விநாயகரே யாட ரூஞ்சல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செங்கதிருந் தண்மதியுங் கவிகை தாங்கத்
திறன்மிகுந்த வுலவையுயர் கவரி வாங்கப்
பொங்குநிதி பதிபணிவோ டடைப்பை தாங்கப்
புலவர்குழாங் கற்பகப்பொன் மலர்கள் தூவ
மங்கலமா மடந்தையர்கள் கீதம் பாட
மாண்புமிகு நந்திகணத் தலைவர் கூடத்
திங்கடவழ் சோலைமலி யக்க ராயன்
திருப்பதிவாழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்.

4. மங்கலவாத் தியம்பப் பணில மார்ப்ப
வானகதுந் துபிமுழங்க முனிவ ரேத்தப்
பங்கமிலாக் கந்தருவ ரிசைகள் பாடப்
பழையதமிழ்ப் பொதியமுனி மதங்கக் கூட்டத்
துங்கமிகு பாவையர்கள் நடன மாடத்
தூயநதி குளங்கழனி பழனஞ் சூழ்ந்த
மங்குறவழ் சோலைமலி யக்க ராயன்
வான்பதி வாழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்.

5. நான்மருங்கு முள்ளநறும் புனனீ ராட்டி
நயப்புறுபூம் பட்டுடுத்துத் தாமஞ் சூட்டிக்
கான்மருங்கி லகில்சாந்த தூப மூட்டிக்
காமருநற் கருப்பூர தீபங் காட்டித்
தேன்மருவு முக்கனிய மமுதுங் கூட்டித்
திகழ்பூதி மெய்யடியார் வடந்தொட் டாட்ட
வான்மருவு சோலைமலி யக்க ராயன்
வண்பதிவாழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வில்லோங்கு மாணிக்க மகுட மாட
விரலோங்கு கங்கைமதிச் சடையு மாடப்
புல்லோங்கு நல்லறுக்குத் தொடையு மாடப்
புரியோங்கு வடமாட மதாணி யாட
எல்லோங்கு திருவிழியுஞ் செவியு மாட
இன்போங்கு தொண்டர்வினை யெல்லா மோடச்
செல்லோங்கு சோலைமலி யக்க ராயன்
செழும்பதிவாழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்.

7. திருமாலும் நான்முகனுந் தேவர் தாமுந்
தீமைபுரி கயமுகனாற் சிறமை யெய்தி
மருமலர்த்தாள் புகலடைந்து காப்பாயென்று
வரங்கிடப்ப வான்மருப்பு வாங்கிக் கொன்று
கருதாகு வாகனமாய்க் கருணை செய்தோய்
கற்பகமே யிடர்நீக்குங் காதற் றேவே
பெருகுபுனற் கழனிபொலி யக்க ராயன்
பெரும்பதிவாழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்.

8. பிறைக்கண்ணி முடிக்கணிந்த பெம்மா னோர்பால்
பிறங்குலகந் தருகன்னிப் பிராட்டி யோர்பால்
நறைக்கடப்ப மலர்மாலைச் சிலம்ப னோர்பால்
நல்லகண நாதரொரு பாலே யாகச்
சிறைக்கழனிக் கந்தபுர முதலாம் வைப்பிற்
சிவதொண்டர் நின்னருளின் கோலங் காண
அறைகடல்போ லார்த்தடைந்தா ரக்க ராயன்
அணிநகர்வாழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆனைமுக மோங்காரப் பொருளே யென்றும்
அழகுசடை சிவஞான முடைமை யென்றுங்
கூனன்மதி மூவுயிரைக் காப்ப தென்றுங்
கொண்டகங்கை செருக்குறுக்கங் கொள்கைத் தென்றும்
ஊனமிலாக் கொம்புமல முடைப்ப தென்றும்
உயர்பாசம் வினைநுகர்ச்சி யூட்டு மென்றும்
ஞானநெறிப் புலவர்சொல வக்க ராயன்
நற்பதிவாழ் விநாயகரே யாட லூஞ்சல்.

10. அங்குசங்கைப் பிடித்தவரே யாட லூஞ்சல்
அமரர்பகை நொடித்தவரே யாட லூஞ்சல்
பொங்குபிறை தரித்தவரே யாட லூஞ்சல்
புனிதமுடி பரித்தவரே யாட லூஞ்சல்
துங்கமறை யுருவினரே யாட லூஞ்சல்
தூயவருட் டிருவினரே யாட லூஞ்சல்
சங்குமணி நிலவெறிக்கு மக்க ராயன்
தண்பதிவாழ் விநாயகரே யாட லூஞ்சல்.

11. கார்வாழி கதிரவனும் மதியம் வாழி
கலியோடு பகைபிணியும் பசியும் நீங்கிப்
பார்வாழி யறமிரண்டும் பயின்று வாழி
பழையதமிழ் புதியதுறை பழகி வாழி
ஏர்வாழி மன்னுயிரு மரசும் வாழி
ஏரம்பர்க் கொருகோயி லிங்கெ டுத்த
பேர்வாழி சிவம்வாழி யக்க ராயன்
பெரும்பதிவாழ் விநாயகரே யாட லூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகப் பெருமானுடைய சில திருப்பெயர்கள்

1. விநாயகன்: தன்னின் மேலான நாயகன் இல்லாதவன். தன்னேரில்லா முதல்வன் என்பது பொருள். தீயோர்களையும், இடையூறுகளையும் அழிப்போன் என்பது அதன் தாற்பரியம்.

2. அங்குசபாசமேந்தி : அங்குசத்தையும் பாசத்தையும் கையிற்கொண்டவர். அங்குசம் - தோட்டி. பாசம் - கயிறு. ஏந்தி - ஏந்தியவர். பாசமேந்தி, அங்குசமேந்தி என்று பிரித்து வழங்குவதுமுண்டு.

3. **அம்பிகைதனயன்** : உமைக்கு மகன். **அம்பிகை** - உமை. **தனயன்** - மகன்.

4. **முன்னோன்**: யாவராலும் முன்னாகக் கொள்ளப்படுபவன்.

5. **ஐங்கரன்** : ஐந்தாகிய கரங்களுடையவன். இதுபோல ஒரு தந்தன், நால்வாயன், முக்கண்ணன், கால்குறியன் என உறுப்புப் பற்றிவருவனவுங் கொள்க.

6. **மூத்தோன்**: மூத்தபிள்ளை, மூத்தபிள்ளையார் என்றும் பிள்ளையார் என்றும் வழங்கப்படுவர். முருகப்பெருமானை இளைய பிள்ளையார் என்பர்.

7. **ஒற்றை மருப்பினன்** : ஒரு கொம்புடையவன். **மருப்பு** - கொம்பு

8. **ஏரம்பன்**: உருத்திரனுக்கு அண்மையிலிருப்பவன் என்றும், அடியாரை வளர்விப்பவன் என்றும் பொருள் கூறுவர்.

9. **கங்கை பெற்றோன்**: கங்கையை அணிந்தவன்.

10. **கணபதி**: கணங்களுக்குத் தலைவன்.

11. **ஈசன் மைந்தன்**: சிவனுக்கு மகன்.

12. **கயமுகன்**: யானைமுகம் போன்ற முகத்தையுடையவன். **கயம்** - யானை. **முகம்** - முகத்தையுடையவன். ஆனைமுகன், தந்திமுகன், புகர்முகத்தோன் என்பனவும் இப்பொருட்டாதல் காண்க.

13. **ஆகுவாகனன்**: பெருச்சாளி வாகனமுடையோன். **ஆகு** - பெருச்சாளி. **வாகனம்** - ஊர்தி. எலியூர்தி என்பதும் கொள்க. பிற்கால இலக்கியங்களிலே பயின்று வந்த இச் சொற்களை அறிதல் பயனுடைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

## ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்,
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்,
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரும் புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
36 பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
41 குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
47 இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
51 புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
56 முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆநந்தத் தழுத்திஎன் செவியில்
61 எல்லை யில்லா ஆநந் தம்அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
67 வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
72 வித்தக! விநாயக! விரைகழல் சரணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனக் கலம்பகம்

சங்கினம் ஒலிக்கத் தெங்கினம் சிரிக்கும்
பைங்கிளி யொடுகுயில் பண்ணிசை பாடும்
கந்தவ னங்களி தந்திடும் முருகா!
இமிழ்கடல் நானிலம் தமிழொடு தழைய
நின்திறம் பாடிப் பரவினம்
குன்றுவிட் டெம்முளம் குடிபுகுந் தோயே!

போமிளமை செல்வமெனப் புலம்புற்ற மடியாமல் புவியின்மீது
தோமறுநேர்க் காந்தமதை எதிர்க்காந்தம் இழுத்தலென இழுத்து நம்மை
ஏமமுறச் செய்திடவே இருக்கின்றான் கந்தவனத் திறைவன் நல்லீர்!
காமமுறக் கடம்பனடி கைதொழுவோம் அவன்தானே காத்து நிற்பான்

நீகந்த வனத்து நிலையாகி நின்றாய் நிலையா தெங்கள் [காலம்
நேருக்கு நேராய்ப் போருக்கு வாரார் நெருப்பாக வஞ்சம் [புரிவார்
ஆகந்த இதுவோர் கெடுங்காலம் அன்னை அழுதாலும் சிரிப்பார் [உளரே
அணுகுண்டு கண்டே அழிகின்ற காலம் அறியாது வந்த [அறிவால்
வேகின்ற காலம் மெலியாரை வலியர் வெறுப்போடு துன்பம் [விளைப்பர்
மிகையான பேர்கள் விளைத்தாலும் தீமை வெகுநேர்மை என்று [மொழிவார்
தீகின்ற துள்ளம் திருவாரும் கந்த வனத்தானே வருகை [புரிவாய்
தீராதகாலம் திறம்பாதோ நல்ல செழிகாலம் காண உலகே.

தேடிப் பிடித்தவொர் செல்வமடி - சிவன்
சேர்ந்து படிக்குமொர் பள்ளியடி
நாடிப் புகழ்ந்திடும் தெய்வமடி - அவன்
நான்மறை மாற்றிய நல்லனடி.
கோலகி குறத்தியின் கொண்கனடி - அருள்
கோலக் கொடுத்திடு கொற்றனடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்மணிமாலைப் பதிகம்

இலைமென் றிரங்கி யிரக்கப் புகுந்து
நிலையொன்றி நீவருந்த வேண்டாம் - அலையொன்றி
மன்னுதுறைக் கந்த வனத்தருகே யாறுமுகப்
பொன்மலையொன் றுண்டங்குப் போ.

கந்தாவள நின்றானுயர் தண்டாமரை கொண்டான்
சங்கார்கா னென்போர்நுதி தாளாதடந் தோளா
கந்தாநதி மைந்தாநுதி குந்தாகதி தந்தாள்
காரார்மயில் வீராவய லூராவதி சூரா.

வாமுருகா கந்த வனமுருகா வாறு
சிரமுருகா செவ்வேண் முருகா - பெருகுதமிழ்
நூன்முருகா வென்னவினை நூறுமே பேரின்பம்
வேன்முருகா வென்ன மிகும்.

மனின்னுங்கதிர்வடி வேலுண்டு வெற்றி மயூரமுண்டு
முன்னுந் திருமுக மாறுண்டு முண்டகத் தாளுமுண்டு
மன்னு மருளுண்டு கும்பிடக்கந்த வனமுமுண்டால்
இன்னும் பயமுனக் குண்டோ மறலி யெதிர்கினுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுலகு மறுவின்றி வாழவொளி தருமுகமு
மார்வலர்க் கருளமுகமும்
மந்திர விதிப்படிநல் லந்தண ரியற்றுமறை
வந்தன முவக்குமுகமும்
இன்னுமுண ராதமெய்ப் பொருளினைப் பக்குவர்க்
கீகின்ற ஞானமுகமும்
இன்னார் தமைக்கடிந் தருள்கின்ற வாண்முகமு
மின்பநகை புரியுமுகமும்
பன்னிரு தடந்தோளு முன்னுமிரு தாளுமென்
பாவவலை பருகுவேலும்
பாவைநல் லார்களிரு பாலுமாய் நல்வரம்
பாலிக்க முன்வருகுவாய்
கன்னல்பூ கந்தமூவ வன்னிமேகந்தமூவு
கந்தவன மதனில்வாழும்
கலபமா கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

வற்றாத கருணைப் பெருங்கடலி லன்பெனும்
மத்திட்டுணர்ச்சிகயிறாய்
மாறாது கடைவந் திடுஞான வமுதமே
மற்றதனி லூற்றபயனே
பற்றாத வர்க்குமருள் நீதியே யாதியே
பவவிருட் கொருசோதியே
பார்க்கத் தெவிட்டாத வழகொழுகு தெய்வமே
பாவலர்கள் சேமநிதியே
அற்றார்க் களித்திடும் பேரின்ப வாரியே
ஆறுமுக ஞானமலையே
ஐயனே ஈராறு கையேனே மெய்யார்நெஞ்
சகலாத மணிவிளக்கே
கற்றார் விழுங்கிடுங் கனியே யடைக்கலங்
கண்ணருள்செய் கந்தவனம்வாழ்
கலபமர கதமயிலி னலிகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகா.

தும்பிக்கையோனைத் துதித்துப் பூசை செய்து
கந்தவனக் கந்தனுக்குப் புராணம் விரித்துரைத்து சந்ததமும்
சந்திரமௌலீஸ்வரனைச் சிந்தை செய்து
பந்த மறுத்துப் பரமனடி சேர்ந்தான் திரவியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

தும்பிக்கையோனைத் துதித்து பூசை செய்து
கந்தவனக் கந்தனுக்குப் புராணம் விரித்துரைத்து
சந்ததமும் சந்திரமௌலீஸ்வரனைச் சிந்தை செய்து
பந்தமறுத்துப் பரமனடி சேர்ந்தான் திரவியமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நன்றி



எம்மையெல்லாம் நீங்காத் துயரில் ஆழ்த்திவிட்டு இவ்வுலக வாழ்வை நீக்கி இறைவனடி எய்திய எம் குடும்பச் செம்மல் அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து பல உதவிகளும் வழங்கியவர்களுக்கும், மரணச் சடங்குகளிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியங்களிற் கலந்து கொண்டவர்களிற்கும் எமக்குப் பலவகைகளிலும் அவ்வப்போது உதவிய இதர சுற்றத்தார், அயலார், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**சின்னத்தம்பி செல்லம் + ஆச்சிமுத்து**


- இராசமுத்து + செல்லையாபிள்ளை
  - குழந்தைவேலு + பவானியம்மா
    - பாஸ்கரன் + கமலராணி
      - குருபரன், நிஷாந்தன்
    - வாகீசன் + சாந்தினி
      - டிவாகர், டிலக்ஷன்
    - ஞானேந்திரி + கயிலாயபதி
      - சுதாகர், யாழினி
    - தேவரஞ்சன் + மணிமேகலை
    - நந்தபூபன்(சிங்கப்பூர்) + நிறஞ்சனா
      - சாயிந்தியா
    - யோகேந்திரி + குனேந்திரன்
  - சின்னத்தம்பி(கனடா) + பரமேஸ்வரி
    - விமலேந்திரன் (அமெரிக்கா)
    - துஷ்யந்தி (கனடா) + பிரகாஷ்
      - வித்தியா
    - தமயந்தி (கனடா) + கணேஸ்
      - திவ்வியா
  - விவேகாநந்தர் + ஞானாம்பிகை
    - சண்முகநாதன் + யசோதை
      - கஜானான், வைஷாலினி
    - குகநாதன் (சுவிஸ்)
    - வாசுகி + நந்தகுமார்
      - கஜேந்திரன், வதனி
  - சாந்தநாயகி + குமரகுரு
    - கணேசநாதன் (பிரான்ஸ்)
    - யசோதை + சண்முகநாதன்
      - கஜானன், வைஷாலினி
    - ஆறுமுக + சுகந்
- இரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Masila Off Set Printers - Nelliady

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org